பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 17 ஞாயிற்றுக்கிழமை (03.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 07

# புலிகளைத் தடைசெய்வது குறித்து

# அரசாங்க உயர்மட்டத்தில் பரிசீலனை

## நிபந்தனையுடன் விதிக்க அமைச்சரவை ஆராய்வு

கொழும்பு,டிசெம்பர் 3

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்வது குறித்து அரசாங்கத்தின் உயர்மட்டங்களில் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக கொழும்பில் ஊர்ஜிதம் செய்யப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான பேச்சாளரும், அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெலவும், விடுதலைப் புலிகளை இலங்கையில் தடைசெய்வது குறித்து ஆராயப்பட்டு வருவதாகக் கூறியுள்ளார். (மற்றொரு செய்தியைப் பார்க்கவும்)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டபாய ராஜபக்ஷ மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்தே இத்தகைய சூழ்நிலை தோன்றியுள்ளதாச் சொல்லப்படுகிறது.

ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் விசேடமாக வற்புறுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்வது குறித்து ஆராய்கிறோம்

### அமைச்சர் ரம்புக்வெல தகவல்



கொழும்பு,டிசெ.3

இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வது குறித்து அரசு ஆராய்ந்துவருகின்றது என பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியில் நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகள் அமைப்பை அரசு தடை செய்ய முடிவு செய்துள்ளது என்று (08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை உடனடியாகத் தடைசெய்யக்கோரி ஹெலஉறுமய ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும்

கொழும்பு,டிசெ.3

இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்யுமாறு கோரி 500 இற்கும் மேற்பட்ட பிக்குகள் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள் ஹெல உறுமயவின் ஆதரவாளர்கள் ஆவர்.

நகர மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு கூடிய பிக்குகள் அங்கு அமர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்திய பின் ஊர்வலமாக அலரி மாளிகை நோக்கி பதாகைகளுடன் புறப்பட்டனர்.

மிக நீளமான மஞ்சள் நிறத்திலான பதாகைகளில் ''எல்.ரி.ரி.ஈ.ஐ உடனடியாகத் தடைசெய்'' என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

அலரிமாளிக்கைக்குச் சென்ற பிக்குகள் ஜனாதிபதிக்கு பெயரிடப்பட்ட மகஜரைக் கையளித்தபின் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

பாதுகாப்புச் செயலர் கோட்டபாய ராஜபக்ஷமீது நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்தே ஹெல உறுமய இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

புத்தபிக்குகளின் ஆர்ப்பாட்டத்தின்போது....



## போவரின் கிளிநொச்சி விஜயம் நாளையல்ல; செவ்வாயன்றே?

கொழும்பு,டிசெ.3

இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட தூதர் ஹன்சன் போவர் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையே கிளிநொச்சி செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு வந்த போவர் பலதரப்புகளுடனும் பேச்சுக்களை நடத்திவருகின்றார்.

நாளை அவர் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமையே அவர் கிளிநொச்சி செல்வார் என இப்போது அறியப்படுகிறது.

அரசுத்தரப்புடன் போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அவர் பேசினார் என்றும் -

அரசுத்தரப்பில் சாதகமான பதில் கிடைக்காத நிலையில் அவர் வன்னி செல்லவுள்ளார் என்றும் - ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (அ-1)

## மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே போக்குவரத்துச்சபை பஸ்சேவைகள்

### பண்ணையில் போதிய வசதிகள் இல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.3

குடாநாட்டில் மறு அறிவித்தல் வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பஸ் சேவை நடத்தப்படவுள்ளது.

பண்ணையில் தங்களது பஸ்களை நிறுத்தவோ, பஸ் சேவையில் சேரும் பணத்தை வைக்கவோ, தொழில்நுட்பத் திருத்த வேலைகளைச் செய்யவோ வசதிகள் இல்லை என்றும் -

இதன்காரணமாக சேவையை முழுமையாக நடத்தமுடியாத நிலை ஏற்பட்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ள தபால் பொதிகள் இறக்கமுடியாத நிலை

### கடற்கொந்தளிப்பு காரணமாம்

நல்லூர்,டிசெ.3

திருகோணமலையில் இருந்து 'யால' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள தபால் பொதிகளை இறக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடற்கொந்தளிப்புக் காரணமாக தபால் பொதிகளை இறக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் -

தபால் பொதிகளை எடுத்துவர ஆறு லொறிகளில் சென்ற தபாலக ஊழியர்கள் பருத்தித்துறையில் காத்திருந்து திரும்பினர் என்றும் - அறியவந்தது.

கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ள 3ஆயிரத்து 225 தபால் பொதிகளில் 273 பொதிகள் மட்டுமே நேற்று முன்தினம் இறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-111-203)

## பயணிகள் கப்பல் சேவை தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த கப்பல் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடற்கொந்தளிப்புக் காரணமாக கப்பல்கள் பயணம் செய்யமுடியாத நிலை உருவாகியுள்ளதாக கடற்படையினர் அறிவுறுத்தியுள்ளனர் என்றும் -

இதன் காரணமாக பயணிகள் கப்பல் சேவை திகதி குறிப்பிடாமல் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் - சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பயணிகள் கப்பல் சேவை ஒன்றுவிட்ட நாள்களில் திருமலைக்கும் காங்கேசன்துறைமுகத்திற்கும் இடையில் இடம்பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-1)

## முல்லைத்தீவில் கிபிர்த்தாக்குதல்; பொதுமகன் காயம், வீடுகள் சேதம்!

கிளிநொச்சி,டிசெ3

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பகுதியில் தேவிபுரத்தில் நேற்று முற்பகல் 10.50 மணியளவில் கிபிர் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் எஸ்.நந்தகுமார் (வயது 28) என்பவர் காயமடைந்து புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலில் சில வீடுகளும் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### இராசமணி நாகலிங்கம்

(தேவாலீய வீதி, சங்கானை)

ஜனனம் 21.11.1921 மரணம் 02.12.2002

*திதி : திரயோதசி (03.12.2006)*

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும் - அம்மா
ஆறிடுமோ உம் துயரம் அறுந்திடுமோ உமதன்பு?
நித்தம் உன் நினைவாய் நாம் வாழ்கின்றோம்
ஆண்டவன் திருவடியில் நினைவுத் தீபம் ஏற்றிவைப்போம்.

தகவல் : செல்வி.நா.ஜெயராணி, (ஆசிரியை, யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி)

என்றும் உங்கள் நினைவுடன்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

(சி51437)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி கந்தையா



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் உரும்பிராயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி கந்தையா 02.12.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை உரும்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக் கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சச்சிதானந்தம், தேவாலய வீதி, உரும்பிராய் கிழக்கு.*

(55929)

தகவல்: **பிள்ளைகள்.**

### சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணானந்தன்

( இலங்கை வங்கி முன்னாள் முகாமையாளர்)



புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணானந்தன் 02.12.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக்கணவரும் சிவகணேசன், சிவவேலழகன், அமிர்தவேணி, சிவசேகரன், சிவராஜபவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவச்சந்திரன் (தென்னை அபிவிருத்திச் சபை), வெற்றிவேலு, செந்தில்நேசன், தில்லைநாதன் (ஆசிரியர்), தவலிங்கம் (இலங்கை வங்கி), இந்திரலிங்கம், நவலிங்கம், விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசுந்தரலிங்கம், நடராசலிங்கம் (முன்னாள் மாவட்ட முகாமையாளர், இலங்கைவங்கி), விமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2006) முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருகம்பன் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குரும்பைகட்டி, புலோலி தெற்கு, புலோலி.

**சி.நடராசா (மைத்துனர்) முன்னாள் மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி)** (சி51439)

### ஐயாக்குட்டி ஆறுமுகம்

(Retired Senior Technical Officer, RDA, Nuwara-Eliya)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமான ஐயாக்குட்டி ஆறுமுகம் 01.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாக்குட்டி - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் பொன்னையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சிவசவுந்தரியின் அன்புக்கணவரும் வேலாயுதர், சிவமலர், கங்காமலர், காலஞ்சென்ற உருத்திரமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரமணன், ராஜ்குமார் ஆகியோரின் மாமனும் சண்முகநாதன், சபாரட்ணம் ஆகியோரின் சம்பந்தியும் கண்மணி, கந்தையா, வள்ளிநாயகி, மயில்வாகனம், முத்துலிங்கம் ஆகியோரின் சகோதரனும் கதிரவேற்பிள்ளை, சரஸ்வதி, அமிர்தயோகம், தியாகராசா, தம்பிராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3.12.2006) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**15/1, 1/1, MELEBOURNE AVENUE, COLOMBO - 04., T.P.: 0112508522**

உயரப்புலம், ஆனைக்கோட்டை.

தகவல்: **பொ.தியாகராசா, (மைத்துனர்).** (55893)

### தம்பையா கந்தையா



முகமாலை, எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கந்தையா 30.11.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் (சுந்தரம்), றஞ்சிதமலர், ராஜா, மனோகர் (சுவிஸ்), லிங்கம், ரஞ்சி, செல்வம், தவக்குமார்(லண்டன்), ராணி, சிவாக்குட்டி(திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசம்மா, காலஞ்சென்ற இளையதம்பி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.12.2006 அன்று திருகோணமலையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்தடி வீதி, கொடிகாமம்.*

(55906)

தகவல்: **தேவா(மருமகள்)**

## மடத்தடியில் விசேட கிளை திறப்பு

குடாநாட்டில் உள்ள மக்கள், பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக யாழ். மாவட்ட ப.நோ.கூ.சங்கச் சமாசம் யாழ்.பிரதான வீதி, மடத்தடியில் நேற்று விசேட கிளை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது.

இந்தக்கிளையில் சகலருக்கும் 5கிலோ அரிசி, 2கிலோ பருப்பு, பால்மா பைக்கற் ஒன்று, குழந்தைகளுக்கான பால்மா ஒன்று, பிஸ்கட்மூன்று பைக்கட் போன்ற பொருள்கள் விநியோகம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இயங்கும் சகல ப.நோ.கூ.சங்கக் கிளைகளின் பங்கீட்டு அட்டைகளுக்கும் இங்கு பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியுமென்று தெரிவிக்கப்பட்டது. (203)

பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்

A/L, 2007, 2008, Day

பொருளியல்

இன்று முதல் சகல வகுப்புகளும் ஆரம்பமாகின்றன. உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

**O/L MATHS மேல் மாகாண கல்வித் திணைக்கள வினாத்தாள்**

*இறுதிப் பரீட்சையானது இவ்வினாத்தாளையே ஒத்ததாக அமைவதால் இதனை வழங்குகின்றோம். திகழ் கல்வி நிறுவனம் கே.கே.எஸ். வீதி, இணுவில், கலைக் கல்வி நிலையம் சுதுமலை, பாக்யா புத்தகசாலை கொக்குவில் சந்தி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.*

*விடைக்குறிப்பும் விசேட கருத்தரங்கும் தனித்திறமை வாய்ந்த ஆசிரியர் வருவிக்கப்பட்டு, திகழ் கல்வி நிறுவனத்தில் 05.12.2006 செவ்வாய் 9 மணிக்கு நடத்தப்படும். விரும்புபவர்கள் பங்கு பற்றலாம்.*

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா அன்னப்பிள்ளை

அளவெட்டி மேற்கு, செட்டியார் கலட்டி தம்பளையைச் சேர்ந்த செல்லையா அன்னப்பிள்ளை நேற்றிரவு காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **தி.ஜெயராஜா, (மருமகன்- சுப்பிரமணியம் புத்தகசாலை)**

### சிவக்கொழுந்து பாலசிங்கம்



பெரிய விளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து பாலசிங்கம் கனடாவில் 30.11.2006 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**T.P.No. 5147285993.**

தகவல்: **பவுண் (சகோதரி).**

### சின்னையா மயில்வாகனம்

(முன்னாள் ராணி தியேட்டர் பணியாளர், கந்தசாமி கோயிலடி, கோப்பாய் வடக்கு)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு கந்தசாமி கோயி லடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மயில்வாகனம் 02.12.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும் நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் பூரணத்தின் அன்புக் கணவரும் பாக்கியம், இராசமணி, காலஞ்சென்ற துரை ஆகியோரின் சகோதரரும் ருக்மணி(இராசாத்தி), பத்மாவ (குஞ்சு), மனோகரன்,மகேந்திரன், புஸ்பராணி,தபேந்திரன்,காலஞ்சென்ற ரவீந்திரன், வதனி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று(03.12.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: **சோமசுந்தரம் (மருமகன்) ராணி தியேட்டர் காசாளர்.**

### அப்புத்துரை விநாயகலிங்கம்

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த அப்புத்துரை விநாயகலிங்கம் (பவுண்) கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் குச்சப்பிட்டி மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

*வாகையடி ரோட், மட்டுவில் தெற்கு, [illegible]*

தகவல்: **[illegible] (மகன்).**

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா செல்லக்கொழுந்து

கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி கந்தையா செல்லக்கொழுந்து நேற்று(02.12.2006)சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா கந்தையாவின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம், இராசலட்சுமி, திருநாவுக்கரசு, சிவஞானம், வசந்தராணி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, துரைரெத்தினம், தர்மலட்சுமி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் அந்தியகிரியைகள் இன்று(03.12.2006)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதா பேக்கரி, கொக்குவில் மேற்கு, கேணியடி.*

தகவல்: **பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.** (55916)

### தேவதாசன் விமலா (வசந்தி)



சில்லாலை கதிரமாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தேவதாசன் விமலா (வசந்தி) அகாலமரணமானார்.

அன்னார் பாக்கியநாதர் - அன்னம்மா தம்பதியரின் மகளும் சந்தியா - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் விஜிதா, றாஜன், தமிழ்ச்செல்வி, தமிழ்ச்செல்வன், தமிழரசி, கலையரசி ஆகியோரின் தாயும் நாகேந்திரம் (லண்டன்), சிவகுமார்(டோகா), முத்துலட்சுமி, பவானி, கண்ணன், பிரதீபன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சன் நிக்கிளார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(55952)

தகவல்: **மக்கள், மருமக்கள்.**

### தம்பையா வல்லிபுரம்



விக்கினேஸ்வரா வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, சபாபதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட (முன்னாள் இலங்கை போக்குவரத்து சாரதி) தம்பையா வல்லிபுரம் நேற்றுமுன்தினம் (01.12.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா -செல்லாச்சி தம்பதியரின் மகனும் தங்கப்பிள்ளையின் அன்புக் கணவரும் மாலாணரின் அன்புச் சகோதரனும் கமலினி, பாமினி(கொழும்பு), சிவகுமார், யசோதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வரத்தினம், சண்முகதாஸ் (கனடா), ஜெயதர்சினி, பவளராணி ஆகியோரின் மாமனும் செந்தூரன், ஜீவிதா,கோகுலன், கார்த்தீபன், யாழினி,ஜெயதீபன், சிந்துஜா, ஜெயதர்சன், கஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***தற்காலிக முகவரி: நீதிராஜா லேன், கொக்குவில் மேற்கு,ஐயனார் கோயிலடி.***

(55894)

தகவல்: **சிவகுமார்(மகன்), மினிபஸ் உரிமையாளர்.**

### பொன்னையா தருமராஜா

(ஓய்வுபெற்ற சிறாப்பர், யாழ். மாநகரசபை)



கொக்குவிலைச் சேர்ந்தவரும் நல்லூரைப் வசிப்பிடமாகவும் கொண்டவருமான பொன்னையா தருமராஜா நேற்று(02.12.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியம் - பொன்னையா தம்பதியரின் அன்பு மகனும் நடராஜா - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீகிருஸ்ணா(பிரான்ஸ்), ஸ்ரீமுரளி (ஆசிரியர், யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஸ்ரீ வாணி (பாலர் கல்விக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்சிகா (பிரான்ஸ்), சியாமளா,ஜெயதீபன் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற பூமணி, அன்னம்(கனடா) ஆகியோரின் சகோதர னும் இராமநாதன், சறோஜினி, நல்லதம்பி, ஜெயவீரசிங்கம் ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.12.2006)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை, நல்லூர் வடக்கு.*

(55921)

தகவல்: **மனைவி,மக்கள்,மருமகன், பேரப்பிள்ளைகள்.**

### கந்தையா முருகையா



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முருகையா 29.11.2006 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமரர்களான சோமசுந்தரம் - கௌரியம்மை தம்பதியரின் பாசமிகு மருமகனும் நேத்திரம்பாளின் அன்புக் கணவரும் ஈஸ்வரி, புவனேஸ்வரன், புஷ்பாஞ்சலி, ரஞ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சேகரன், தெய்வகலை, சிவமயம்,பிரபாகர் ஆகியோரின் அன்பு மாமனும் கயலக்ஷி, சுபலக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.11.2006 வியாழன் வவுனியா பட்டைக்காட்டில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பட்டைக்காடு, வவுனியா.*

(55934)

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஏ-9 பாதைக்குள் சிறைப்பட்டு வாடும் குடாநாட்டு மக்களின் உணவுத் தேவை போதிய அளவில் பூர்த்தியாகிறதா?

கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி முகமாலைப் பகுதியில் அரச படைகளுக் கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உருவான மோதல்கள் காரணமாக நாட்டின் வெளிமாவட்டங்களுக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் இடையேயான ஒரேயொரு தரைவழிப் பாதையான ஏ-9 பாதை மூடப்பட்டது.

அதன் காரணமாக யாழ்.குடாநாட்டில் உருவான அத்தியாவசியப் பொருள்களுக் கான தட்டுப்பாடு முன்னொருபோதும் ஏற் படாத அளவுக்கு யாழ்.குடாநாட்டுப் பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கும் விவகாரமாக மாறியுள்ளது.

அந்த விவகாரம் நமது நாட்டைத் தாண்டி இன்று சர்வதேச ரீதியில் பல தரப் புக்களின் கவனத்தையும் ஈர்த்து விமர்சனங்களுக்கு உட்படும் விடயமாக அமைந்துவிட்டது.

அந்தவகையில் கடந்த நவம்பர் 26ஆம் திகதிய ஞாயிறு 'லங்காதீப' இதழில் ஏ-9 பாதை மூடப்பட்டதால் உருவான சிக்கல்கள் குறித்து அஜந்தகுமார அகலகட மற்றும் சீ.ஜே. அமரதுங்க ஆகியோர் எழுதிய இரண்டு வெவ்வேறு பத்திகளின் தொகுப்பு இங்கு தமிழில் தரப்படுகின்றது.

ஜெனீவா சமாதானப் பேச்சுக்களும் மூடப்பட்ட ஏ-9 வீதியும் மீண்டும் பிரச்சினைகளாகத் தலைதூக்கியுள்ளன. வடபுலத்தில் உணவுத்தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறும் விடுதலைப் புலிகளின் கூற்றுக்குப் பதிலடியாக அரசு வடபுலத்துக்கு கப்பல் மூலமாக உணவுப்பொருள்களை அனுப்பிவருகிறது. ஆனால் இது அரசுக்குப் பெரும் செலவினத்தை ஏற்படுத்துமொரு காரியமாகும்.

இலங்கையில் இன்று நிலவும் பாதுகாப்பற்ற நிலை காரணமாக யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களைக் கொண்டு செல்வதற்குக் கப்பல் நிறுவனங்கள் மிகப் பெரிய தொகையைக் கட்டணமாக அறவிடுகின்றன. அந்த வகையில் ஒரு தடவை யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு அரசு செலவிடும் தொகை 67 ஆயிரத்து 250 அமெரிக்க டொலர்கள் ஆகும். அதனை இலங்கை நாணயத்தில் குறிப்பிடுவதாயின் 72 லட்சம் ரூபாவாகும். ஒரு தடவை கப்பற் பயணம் என்பது பொருள்களை ஏற்றிச் சென்று இறக்கும் வரையிலான 14 நாள்களாகும். அந்த வகையில் 17 தடவைகள் வடக்கிற்குப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு கப்பல் கட்டணமாக இன்றுவரை 12 கோடியே 24 லட்சம் ரூபா அரசினால் செலுத்தப்பட்டுள்ளது.

ஏ-9 வீதி மூடப்பட்டுள்ள காரணத்தால் கப்பல்கள் மூலம் வடபுலத்துக்கு உணவுப் பொருள்களைக் கொண்டுசெல்லக் கப்பல்களை வாடகைக்கு அமர்த்தும் செயற்பாடுகளில் ஒரு சிலர் தரகு (கொமிசன்) பெறும் வாய்ப்புக் கிடைப்பதால் பெரும் ஆதாயம் ஈட்டத்தக்க வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கிறது என்பது ஒரு சிலரது கருத்தாகும்.

**கப்பல்களின் பயண அட்டவணை**

| புறப்பட்ட திகதி | கப்பலின் பெயர் | கொண்டு செல்லப்பட்ட பொருள்களின் அளவு |
|---|---|---|
| ஒக. 16ஆம் திகதி | மோர்க்கஸ் ருகுணு | 1500 மெ.தொன் |
| ஒக. 25ஆம் திகதி | எம்.வீ.ஹிந்த் | 900 மெ.தொன் |
| ஒக. 31ஆம் திகதி | மோர்க்கஸ் ருகுணு | 3,680 மெ.தொன் |
| செப். 08ஆம் திகதி | ஏ.520(கடற்படை) | 800 மெ.தொன் |
| செப். 12ஆம்திகதி | எம்.வீ.லிவர் பூல் | 1700மெ.தொன் |
| செப். 16ஆம் திகதி | எம்.வீ.இந்துறுவலி | 3000 மெ.தொன் |
| செப். 22ஆம் திகதி | எம்.வீ.ஹிந்த் | 900 மெ.தொன் |
| செப். 22ஆம் திகதி | எம்.வீ.யால | 2800 மெ.தொன் |
| ஒக். 01ஆம் திகதி | எம்.வீ.ஹிந்த் | 725 மெ.தொன் |
| ஒக். 10ஆம் திகதி | ஏ.520(கடற்படை) | 750 மெ.தொன் |
| ஒக். 12ஆம் திகதி | எம்.வீ.யால | 2,800 மெ.தொன் |
| ஒக். 23ஆம் திகதி | எம்.யென் கலிப்பர் | 700 மெ.தொன் |
| ஒக். 31ஆம் திகதி | எம்.வீ.யால | 2,800 மெ.தொன் |
| நவ. 02ஆம் திகதி | எம்.வி.ருகுணுபுர | 4250 மெ.தொன் |
| நவ. 08ஆம் திகதி | யென் கலிப்பர்" | 700 மெ.தொன் |
| நவ. 08ஆம் திகதி | எம்.வி.ருகுணு | 3,600 மெ.தொன் |
| நவ. 22ஆம் திகதி | மோர்க்கஸ் யால | 2000 மெ.தொன் |

வடபுலத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வது தொடர்பான விவரங்கள் இக்கட்டுரையில் தரப்படுகிறது.

### உணவு அனுப்புவதற்குச் சவால்களும் பிரச்சினைகளும்

ஏ-9 வீதி மூடப்பட்டாலும் கூட யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் பொது மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வேறு மாற்று ஒழுங்குகள் மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொண்டு, யாழ். குடாநாட்டு மக்களுக்கான அத்தியாவசிய உணவுப்பொருள்களை விநியோகிக்கும் தனது பொறுப்பை அரசு புறந்தள்ளிவிட இயலாது. எத்தனை சவால் வந்தாலும், தடை ஏற்பட்டாலும் கூட அப்பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றும் கடப்பாடு அரசுக்கு உள்ளது.

கடல் மார்க்கமாக வடபுலத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச்செல்லும் விடயத்தில் அரசு பல சவால்களை எதிர்நோக்க நேர்ந்தது. உணவுப் பொருள்களை அனுப்புவதற்குத் தேவைப்பட்ட கப்பல் வசதியை ஏற்படுத்திக் கொள்வது அவற்றில் முதலாவதாக அமைந்தது.

அரச ஏற்பாட்டில் பொருள்களை வடபுலத்துக்கு எடுத்துச்செல்லும் கப்பல்களை விடுதலைப் புலிகள் தாக்க முற்படுவதால் அக்கப்பல்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தமை அரசுக்கு இரண்டாவது சவாலாக அமைந்தது.

இத்தகைய சூழ்நிலையில் தனியார் கப்பல் நிறுவனங்களிடமிருந்து தானும் கப்பல்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்வது அரசுக்குப் பெரும் சிரமத்துக்கும் பிரச்சினைக்கும் உரியதாக அமைந்தது.

ஒருவாறு அவ்விதம் கப்பல்களை வாடகைக்குப் பெற முடிந்தபோதிலும் அவற்றுக்கான பொருந்தொகையாகக் காப்புறுதிக் கட்டணங்களை அரசு செலுத்தவேண்டியிருந்தமை அரசு எதிர்நோக்கிய மற்றொரு சிரமமாகும். அதற்காகவும் பெரிய தொகையைச் செலுத்தவேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டது.

### நவம்பர் 22 வரை குடாநாட்டுக்கு கப்பலில் 36,000 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள்

வடபுலத்து மக்களுக்கான அத்தியாவசிய உணவுப்பொருள்களை ஏற்றிக்கொண்டு கப்பலொன்று முதல் தடவையாக கடந்த ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்பட்டது. 'மோர்க்ஸ் ருகுணு' என்ற அக்கப்பலில் அரிசி, சீனி, பருப்பு, மருந்து வகைகள் உள்ளிட்ட ஏறத்தாள ஆயிரத்து 500 மெற்றிக்தொன் நிறையான அத்தியாவசியப் பொருள் கள் யாழ்.குடாநாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அன்று முதல் கடந்த நவம்பர் 22ஆம் திகதி வரை குறிப்பிட்ட ஒரு தொகை அத்தியாவசியப் பொருள் கள் வெவ்வேறு கப்பல்கள் மூலம் 17 தடவைகள் கடல் மார்க்கமாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுசெல்லப் பட்டுள்ளன. அந்தவகையில் மேற்குறிப்பிடட் திகதி வரை கடல் மார்க்கமாக யாழ்ப்பாணத்துக்கு எடுத் துச்செல்லப்பட்ட அத்தியா வசிய உணவுப் பொருள் களின் அளவு ஏறத் தாள 36 ஆயிரம் மெற்றிக் தொன்க ளாகும்.

### விமானம் மூலம் 108 மெற்றிக் தொன்

அதற்கும் மேலதிகமாக மருந்துவகைகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை விமான மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அந்த வகையில் நவம்பர் 22 வரை விமானம் மூலம் 6 தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் மொத்தத் தொகை சுமார் 108 மெற்றிக் தொன்களாகும்.

### பகுதி II

யாழ்.குடாநாட்டில் சிறைப்பட்டிருக்கும் சுமார் 6 லட்சம் பொதுமக்களுக்குத் தேவைப்படும் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் உள்ளிட்ட ஏனைய பொருள்கள் ஏ-9 வீதியூடாக எடுத்துச்செல் லும் பொருட்டு அப் பாதையை ஒரு தடவை மாத்திரம் திறந்து விடுவதற்குத் தான் தயாராக இருப்பதாக அண்மையில் அரசு தெரிவித்திருந்தது.

அவ்விதம் ஒரே தடவையில் பொருள்களை எடுத்துச்செல்லும் நடவடிக்கைக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளவும் அரசு எதிர்பார்க்கிறது. அத்தோடு சுதந்திரமாக இயங்கும் கண்காணிப்பாளர்களின் பிரசன்னத்தில் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்வதும் அரசின் விருப்பமாகும்.

அவ்விதம் ஒரு தடவை மாத்திரம் ஏ-9 போக்குவரத்து [illegible] தற்கு அரசு மே[illegible] தாம் ஏற்க இயலாதென விடுதலைப் புலிகள் அமைப்புத் தெரிவித்துள்ளது. எ-9 பாதை நிரந்தரமாகத் திறந்துவிடப்பட வேண்டுமென அவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

ஏ-9 பாதையை நிரந்தரமாகத் திறந்து வைக்க அரசு இணங்காவிட்டால் அப்பாதையூடாக ஒரு தடவை மாத்திரம் பொருள்களை எடுத்துச்செல்வதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிக்குத் தாம் ஒத்துழைப்பு வழங்குவ தில்லையென்பதே அவர்களது நிலைப்பாடு எனத் தோன்றுகின்றது.




### இணைத்தலைமை நாடுகள் வலியுறுத்து

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு உதவும் இணைத் தலைமை நாடுகளாகக் கருதப்படும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டி லும் வாஷிங்ரன் நகரில் இடம்பெற்ற மாநாட் டிலும் ஏ-9பாதை மூடப் பட்டதால் உருவாகியுள்ள சிக்கல் நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.

பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மனிதாபிமான முறையில் சகல போக்குவரத்து மார்க்கங்களும் திறந்துவைக்கப்படவேண்டியது அவசியமென அந்த இணைத் தலைமை நாடுகளின் கூட்ட முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தரைவழி மார்க்கங்கள் போன்றே கடல் வழிப் பாதைகளும் தடைகள் ஏதுமின்றிப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட வேண்டுமெனவும் இணைத் தலைமை நாடுகள் தமது அறிக்கையில் தெரி வித்திருந்தன.

அந்த வகையில் ஆரம்பநடவடிக்கையாக அரசின் யோசனைகளுக்கு அமைய ஏ-9 பாதையூடாக ஒரு தடவை பொருள்களை யாழ்.குடாநாட்டுக்கு எடுத்துச்செல்வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென இணைத் தலைமை நாடுகளால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் முகமாலையில் வெடித்த மோதல் களின் காரணமாக ஏ-9 தரைவழிப்பாதை மூடப்பட்டமையே இச் சகல சிக்கல்களும் உருவாவதற்குக் காரணமாக அமைந்தது. பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக முகமாலை ஊடாக யாழ்ப்பாணத்துக்குள் பிரவேசிப்பதற்கான தரை வழிப்பாதையைத் திறந்துவைக்க இடமளிக்க முடியாதென அரசு அறிவித்தது. அதேசமயம்,

## எப்பாடுபட்டும் அதனை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் தலையாய பொறுப்பு

முக மாலையூடான போக்குவரத்து மார்க்கம் வழமைபோல் நிரந்தரமாகத் திறந்துவிடப்பட வேண்டுமென விடுதலைப் புலிகள் அமைப்பு வற்புறுத்தி வந்தது.

### ஐ.நா.கொடியுடன் கப்பலில் அனுப்பும் யோசனையும் தோல்வி

யாழ்.குடாநாட்டுப் பொதுமக்களுக்குத் தேவைப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை கடல் மார்க்கமாக எடுத்துச் சென்று விநியோகிப்பதென்பதே அரசின் இப்போதைய ஏற்பாடாகும்.

ஆயினும் அந்த நடவடிக்கைக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தமை ஒரு பிரச்சினையாகத் தலைதூக்கியது. கடற்படையினரின் பாதுகாப்புடன் வடபுலத்துக்குப் பொருள்களை எடுத்துச்செல்வதற்கு கப்பல்களைப் பயன்படுத்தும் விடயம் பெரும் சிரமத்துக்குரிய ஒன்றாக அமைந்தது. அந்த நிலையில் ஐ.நா. அமைப்பின் கொடியுடன் கப்பல்கள் மூலமாக வடபுலத்துக்குப் பொருள்களை அனுப்புவதற்கு அரசு திட்டமிட்டது. ஆனால், எதிர்ப்புக்கள் தலைதூக்கியதன் காரணமாக அந்த முயற்சியும் கைவிடப்பட்டது.

### [illegible]நிலை இப்போது

[illegible]ப்படுத்தப்பட்ட அளவில் யாழ்ப்பாணத்துக்குக் கடல் மார்க்கமாக மேற்கொள்ளப்பெற்ற உணவுப் பொருள் விநியோகமும் சீரற்ற காலநிலை காரணமாக உரிய வேளையில் அனுப்பிவைக்க இயலாது தாமதமாகும் நிலை உருவானது.

இத்தகைய சூழ்நிலையிலேயே ஏ-9 பாதையை ஒரு தடவை மாத்திரம் திறந்து விட்டு ஒரே தடவையில் யாழ்ப்பாணத்துக்குக் குறிப்பிட்டதொரு அளவான அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்புவதென்ற தீர்மானத்துக்கு அரசு வரவேண்டியிருந்தது.

எத்தகைய கஷ்டமோ, சிரமமோ இருப்பினும் யாழ். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்க வழிசெய்யவேண்டியது அரசின் தலையாய கடமையும் பொறுப்புமாகும். அத்தகைய தனது பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றுவதை எந்தவகையிலும் அரசு கைவிட இயலாது; தட்டிக்கழிக்க முடியாது.

சில வெளிநாடுகளின் இலங்கைத் தூதுவர்கள் குழுவொன்று யாழ்ப்பாணத்தின் தற்போதைய உண்மை நிலையைக் கண்டறியும் நோக்கில் அண்மையில் யாழ்ப்பாணத்துகசு விஜயம் மேற்கொண்டிருந்தது.

ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர், சுவிற்ஸர்லாந்துத் தூதுவர், பிரித்தானியப் பிரதி உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட இக்குழுவில் ஆஸ்திரேலியா, கனடா, சுவீடன் சுவிற்ஸர்லாந்து மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி இக்குழுவினருக்கு யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து விளக்கிக் கூறியிருந் தார்.

அதனைத் தொடர்ந்து இக்குழுவினர் யாழ். ஆயர் உள்ளிட்ட பல தரப்பினரையும் சந்தித்து தகவல்களைச் சேகரித்துக் கொண்டதாகவும் தெரியவந்தது.

அக்குழுவினருடனான சந்திப்பின்போது யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களும் ஏ-9 போக்குவரத்துப் பாதை திறந்துவிடப்படவேண்டியது மிக அத்தியாவசியமானதொன்று என்பதை வலியுறுத்தி விளக்கியுள்ளார்.

### அரசின் பெரும் பொறுப்பு

யாழ்.குடாநாட்டில் உருவாகியுள்ள இந்த மனிதாபிமானப் பிரச்சினையை விடுதலைப் புலிகள் அமைப்பு தமது அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான குறிக்கோள்களை ஈட்டிக்கொள்வதற்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்பது தெளிவாகிறது. அவர்களது அத்தகைய நோக்கத்துக்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் அரசு செயற்படக்கூடாது என்பதனை மறுப்பதற்கில்லை.

ஆனால், யாழ்.குடாநாட்டு மக்களுக்கு அவசியமான உணவுப்பொருள்கள் விநியோகம் எந்த விதத்திலாவது அவர்களைச் சென்றடையத்தக்க வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். ஏ-9 தரைவழிப்பாதையைத் திறந்து விடுவதோ அல்லது கடல் வழியாகவோ அல்லது இவ்விரு மார்க்கங்கள் ஊடாகவே யாழ்.குடாநாட்டு மக்களுக்கான அத்தியாவசிய உணவுப்பொருள்கள் தங்கு தடையின்றி அவர்களுக்குக் கிட்டச் செய்வது அரசின் பொறுப்பாகும் என்பதனை வலியுறுத்துகிறோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு வரணி சிட்டிவேரம்(சுட்டிபுரம்) கண்ணகை அம்மன் தேவஸ்தானம்



### ஆலய பொதுக் கூட்டம்

மேற்படி ஆலய பொதுக்கூட்டம் எதிர்வரும் 16.12.2006ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறும். அன்றைய தினம் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறும். பொதுச் சபைப் பிரநிதிகள் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

(சி/51433) ஆலய நிர்வாக சபை.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### யோகராசா கயன்
(வாலிப விளையாட்டுக் கழகம், தோப்பு)

கடந்த 2006.09.05 இல் இறைவனடி சேர்ந்த யோகராசா கயன் அவர்களின் மறைவை யொட்டி அவரின் குடும்பத்தவர்களுக்கும் சக நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாலிப விளையாட்டுக் கழகம்,
தோப்பு.
(55873)

## ஈரவிழிகளுடன் நான்காம் ஆண்டில்



அமரர்
### சுப்பிரமணியம் கந்தசாமி
(ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

மலர்வு 14.12.1935 உதிர்வு 17.11.2002

ஆண்டுகள் நான்கு
மறைந்துவிட்டாலும்
ஆழ்மனதின் அன்புமுகம்
மறைந்திடவில்லை ஐயா
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*நீங்காத நினைவுகளுடன்*
குடும்பத்தினர்.

*சங்கத்தானை*
*சாவகச்சேரி*
(55883)

## நான்காம் ஆண்டு நினைவுகள்



### அண்ணா இராஜேந்திரம் (B.A.(Cey))
(ஓய்வுபெற்ற பதிவாளர், மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

மண்ணில் 13.09.1942 விண்ணில் 18.11.2002

திதி: 03.12.2006

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும், பண்போடும், பாசத்தோடும்
பேணிப் பாதுகாத்து
எம்மை நல்வழியில் நடத்திய
வானுறையும் தெய்வமாகிய எம் அன்புத் தெய்வமே!
தங்கள் திருப்பாதங்களை எந்நாளும் வணங்கி நிற்போம்.

மனைவி,
பிள்ளைகள் : தேன்மொழி, தமிழினி
மருமகன் : வாமதேவன்
பேரன் : தசாரகன்

*'மல்லிகை',*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*
(55887)

## ஓராண்டு நினைவுச் சங்கமம்



### அமரர் செல்லையா தம்பித்துரை
(ஓய்வு பெற்ற நீதிமன்ற முதலியார், கொழும்புத் துறைமுக அதிகார சபை அத்தியட்சகர், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபை உபதலைவர்)

மண்ணுலகில் 08.06.1931 விண்ணுலகில் 14.12.2005

திதி: சதுர்த்தசி 03.12.2006

திருநெல்வேலி பதியில் - உதித்த உத்தமரே
பார்போற்றும் உம்முடைய வாழ்வும்
நீதிமன்றம் சொல்லும் உம்முடைய பேச்சும்
உயிருக்கு உறவாய் உம் பணியில் நின்றீர்
என்றென்றும் எவர் நாவிலும் உன் நாமம் மலரும்

- குடும்பத்தினர்.
021 222 7467, 514 910 7884
thambiraj9000@hotmail.com

*'ராஜ் குடில்',*
*ஆடியபாதம் வீதி*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
(55888)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



அமரர்
### ஜெகநாதன் சிவபாக்கியவதி

தோற்றம் 22.09.1935 மறைவு 03.11.2006

கடந்த 03.11.2006 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்பு அன்னை ஜெக நாதன் சிவபாக்கியவதி அவர்களது 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அப்பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உங்களை அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

*65/3, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(55872) குடும்பத்தினர்.

## திறப்பு விழா வைபவம்

### சிரோனி வெதுப்பகம்

01.12.2006 அன்று பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக 'சிரோனி வெதுப்பகம்' என்னும் ஸ்தாபனம் கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டது. அன்பர்கள், நண் பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரை யும் விஜயம் செய்யும்படி அன்புடன் அழைக் கின்றோம்.

உரிமையாளர்.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் தனித்தனிக் கவனம் கொடுத்து ஆங்கிலத்தில் கதைக்கப் பயிற்சி. By:விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.

THE ROYAL IS THE BEST

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

*சிறுகுறிஞ்சா இலைப் பவுடர் விற்பனைக் குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் சாதா ரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும் உப உணவும் ஆகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியு டன் விற்றமின் A,C யுடன் இரும்பு, நாகம், குரோ மியம், கல்சியம், நார்ப்பொருள்கள் போன்ற நன்மை பயக்கும் பொருள்களையும் கொண்டது.*

**BIO TEC ORIENT (PVT) LTD**
*131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.*
*[பாம் ஸ்கூல் அருகில்]*
*தொ.பே. 021 4590907*
*32/3, ரெயில்வே அவனியூ,*
*கொழும்பு - 05*
*தொ.பே. 0112 852269*
(55468)

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ.உ)

### தேவை

எமது சங்க ELF வானுக்கு புதிய அல்லது பாவித்த 350 எஞ்சின் 24 வோல்ரேச் (மின் வலுவுள்ள) டைனமோ மோட்டார் கியர் பொக்ஸுடன் தேவைப்படுகின்றது. வைத்தி ருப்போர் சுய விவரங்களுடன் விலை குறிப் பிட்டு 07.12.2006 இற்கு முன் தலைவர், *சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை* என்ற விலாசத்துக்கு விண்ணப் பிக்கவும்.

க.இராசதுரை
பொது முகாமையாளர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியை
திருமதி R.மரியநாயகம்
அவர்களின் அன்புச் சகோதரர்
### ரியூபேட் ஆனந்தராஜன்
அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர் கழகம்,*
யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை.
(சி/51425)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி
இயூஜின் யூலியஸ்
அவர்களின் அன்புத் தாய்
### திருமதி பிலிப் அந்தோனியாப்பிள்ளை
மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா நித்திய இளைப்பாறடைய இறைவனை இறைஞ்சுகி றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
*யாழ்/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.*

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் 2004 c பிரிவின்
மருத்துவ மாது மாணவி
### செல்வி கோணேஸ்வரி மாணிக்கவாசகம்
அவர்களின் அன்புத் தாயரான 7ஆம் வட்டாரம், கிளிவெட்டி, மூதூர், திருகோணமலையைச் சேர்ந்த
### திருமதி மாணிக்கவாசகம் இராசபாக்கியம்
அவர்கள் 25.11.2006 அன்று காலமாகிவிட்டார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்த வருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் திக்கின்றோம்.

அதிபர்,
[illegible]
மாணவர்கள், ஊழியர்கள்,
*[illegible] கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*
(55890)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 - 12 - 1953
மறைவு 14 - 12 - 2005

### திருமதி சந்தியநாதன் இராசமலர்

அள்ளி அணைத்தெடுத்து உணவூட்டி
அறிவூட்டி அன்புடனே நாம் வளர ஏணியானவரே!
எள்ளளவும் சோர்வின்றி தூக்கம் பசி மறந்து
எந்நாளும் சுயநலம் ஏதுமின்றி வாழ்ந்தவரே
வெள்ளமென பொங்கிவரும் கண்ணீரோடு இதயத்தில்
வெந்தணலாய் குமுறியழ வைத்தேகி எங்குற்றாயோ
கள்ளமிலா மனதாளே உங்கள் பொன்னடியில்
காலமெலாம் மலர்தூவி வந்தனை செய்வோமே

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.*
(55887) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### இரங்கநாதன் பிரபாசங்கர்(குஞ்சுபபி)



உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இரங்கநாதன் பிரபாசங்கர் 30.11.2006 வியா ழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சுபாங்கினியின் அன்புக் கண வரும் டிதுஷன், மிருஷா ஆகியோரின் அன் புத் தந்தையும் காலஞ்சென்ற சிதம்பரப் பிள்ளை இரங்கநாதன் - இராசபூபதி தம்பதி யரின் அன்பு மகனும் விடத்தற்பளை சுப்பிர மணியம் - நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி சிதம்பரப்பிள்ளை சிதம்பரத்தின் அன்புப் பேரனும் இரவிசங்கர், ஜெயசங்கர்(கனடா), இரவிச்சந்திரிக்கா, சிவசங் கர்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராணி, சசிகலா(கனடா), இராஜேந்திரா(யாழ்.செயலகம்), பகீரதி(சுவிஸ்), கணேசதாஸ் (சுவிஸ்), முருகதாஸ் (கனடா), சுமதி - ஸ்ரீதரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 02.12.2006, 03.12.2006 இரு தினங் களும் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இன்று 03.12.2006 ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு பொறளை கனத்தை மயானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

*தொ.பே. : 011 2434027*
தகவல்:
கு.இராஜேந்திரா (மைத்துனர்).
(55877)

### காசிப்பிள்ளை முத்தையா காசி விசுவநாதன்

பருத்தித்துறை, வியாபாரிமூலையை பிறப்பிடமாகவும் 9 6/1 Moor Road, வெள்ளவத்தையை வதிவிடமாகக் கொண்டவரும் இறைவரித் திணைக்களம் Kreston MNS &co ஆகியவற்றில் வரி உத்தியோகத்தராகக் கடமையாற்றி இளைப்பாறியவருமான காசிப்பிள்ளை முத்தையா காசி விசுவநாதன் 28.11.2006 இரவு 10.30 மணியளவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா பர்வதபத்தினிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் தேவாம்பிகையின் (அம்பி) அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் வள்ளி (சுகா தார அமைச்சு), சிவபிரான்(U.K.), வஞ்சி(Australia) ஆகியோ ரின் அன்புத் தந்தையும் பிரபாகர் (Oxfam G.M.), மீரா,சடாச்சரன் ஆகியோரின் அன்பு மாமனும் கதிரவேற்பிள்ளை, குமரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராமச்சந்திரன் (நல்லூர்), பாலச்சந்திரன்(கொக்குவில்), நீலாம்பிகை(கொழும்பு), வேதாம்பிகை(U.K.), Dr.செல்வச்சந்திரன்(U.K.), விமலச்சந்திரன் (Canada), யசோதாம்பிகை (U.K.) ஆகியோரின் அன்பு மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலை யில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இன்று(03.12.2006) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் பொரளை கனத்தை மயானத் திற்கு தகனக்கியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9-6/1, Moor Road, Colombo-06*
*Tel 0112-360870* (55859)
தகவல்:
மனைவி,மக்கள்

### அப்பையா கனகராசா

மானிப்பாய் வடக்கு, சமர்த்தி ஒல்லை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வதிவிடமாகவும் தற்போது U.K. இல் வசித்தவருமாகிய கனகராசா 26.11.2006 ஞாயிற்றுக்கிழமை (U.K.) இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா அப்புக்குட்டி நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும்,சந்திரலீலாவின் (U.K.) அன்புக் கணவரும் பிரியந்தா(U.K.) ,திபாகரன்(U.K.) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தியாகராசா (அஸ் பெஸ்ரோஸ் இரத்மலானை), துரைராசா(U.K.) , இராஜேஸ்வரி (மானிப்பாய் தற்போது வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோ தரனும் கனகசபை பொன்னம்மா தம்பதியரின் (இணுவில்), மரு மகனும் இந்திரா (கனடா), ஸ்ரீஸ்கந்தராசா(குமார்), தவராசா, குக ராசா(ஜேர்மனி), யோகராசா(இணுவில்), காலஞ்சென்ற சகுந்தலா (கல்கிசை), இந்திரா(கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் அனுஷியா, கோபிநாத், ரவீந்திரன், அரவிந்தன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2006) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,பிள்ளைகள்
(U.K.)
0442084228034

இராஜேஸ்வரி(சகோதரி)
யாழ்.வீதி,வவுனியா. 0776579279
துரைராசா(சகோதரன்)
லண்டன்
(55859)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் இயக்கத்திற்குத் தகவல் வழங்கிய ஆறு இராணுவத்தினர் பொலிஸாரால் கைது

## ஒரு மேஜர் தர அதிகாரி உட்பட போலி டாக்டர் ஒருவரும் கைது

கொழும்பு, டிச. 3

புலிகள் இயக்கத்துக்கு இராணுவத் தகவல்களை வழங்கினர் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒரு மேஜர் தர அதிகாரி உட்பட ஐந்து இராணுவ உத்தியோகத்தர்களும், இவர்களுடன் தொடர்புகளைப் பேணி வந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் போலி டாக்டர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைக் கைதுசெய்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்றுக்காலை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

ஜனவரி முதலாம் திகதிவரை இவர்களை விளக்கமறியலில் வைத்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொள்ள கொழும்பு நீதிமன்ற நீதிவான் திருமதி குசல சரோஜினி வீரவர்த்தன உத்தரவு வழங்கினார்.

இவர்களின் தற்போதைய சொத்துக்கள் தொடர்பாக புலனாய்வுத்துறைப் பொலிஸார் ஆரம்ப விசாரணைகளை நடத்திய போது அதிகளவிலான பண வைப்புகள் இவர்களது வங்கிக் கணக்குகளில் இடப்பட்டுள்ளதென மன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுகுறித்த மேலதிக விசாரணைகளை பயங்கரவாத தடுப்பு புலனாய்வுத்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் நாளைமுதல் நானாவிதப் பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 6ஆம் கட்ட நிவாரண விநியோகம் முடிவடைந்தவுடன் நானாவிதப் பொருள்களின் விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்று சங்க வட்டாரம் தெரிவித்தது.

6ஆம் கட்ட நிவாரண விநியோகம் நாளை திங்கட்கிழமை முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த விநியோகம் முடிவடைந்தவுடன் நானாவித சில்லறைப் பொருள்களின் விநியோகம் ஆரம்பமாகும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயறு, கடலை, தேங்காய் எண்ணெய், புளி, தீப்பெட்டி, சர்க்கரை, மல்லி, தேயிலை, பற்பசை, தேங்காய்பால்மா, போன்ற நானாவிதப் பொருள்களே விநியோகிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (202)

# இலங்கையில் மோசமான உரிமை மீறல்கள் ஐ.நா. ஆணையம் தலையிடக் கோரிக்கை

## சர்வதேச சட்ட நிபுணர் குழு வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.3

இலங்கையில் மிகவும் மோசமாக நசுக்கப்பட்டு வரும் மனித உரிமை மீறல் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையம் உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச சட்ட நிபுணர் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டின் மனித உரிமையை முழுமையாக நிலைநாட்ட ஆவன செய்ய வேண்டும் எனக் கோரியுள்ள அக்குழு, இக்கோரிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணையம் தட்டிக் கழிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளும், மனிதாபிமானச் சட்டங்களும் மிக மோசமாக மீறப்படுவதை நிறுத்துவதிலும் மேலும் சிதைவுறாமல் தடுப்பதிலும் மனித உரிமை ஆணையம், ஆக்கபூர்வமான பணியைச் செய்ய முடியும்; செய்ய வேண்டும் என்று அது கூறியுள்ளது.

பொது மக்கள் கொல்லப்படுவது, கடத்தப்படுவது, சித்திரவதைப் படுத்தப்படுவது போன்ற கொடுமைகளுடன் மக்கள் இடம்பெயர கட்டாயப்படுத்தப்படுவது, சிறார்களைப் பலவந்தப்படுத்திப் படையில் சேர்ப்பது குறித்துத் தொடர்ந்து அறிக்கைகளைத் தாம் பெற்று வருவதாகத் தெரிவித்த குழு, இவை யுத்த காலக் குற்றங்கள் எனவும் சாடியது.

பொது மக்களையும், இராணுவ இலக்குகளையும் பிரித்துப் பார்க்க வேண்டிய அடிப்படையைக் கூட மதிக்காமல் ஸ்ரீலங்காப் படைகள் தாக்குதல்களை நடத்துகின்றன. இதனால், இராணுவத் தாக்குதல்களின்போது அநாவசியமான உயிர்ச் சேதங்களும், பொது மக்கள் பாதிக்கப்படுவதும் நிகழ்கின்றன.

பாகுபாடற்ற, முறையான, கடுமையான விசாரணைகள் செய்யப்பட வேண்டும். உதாரணமாகக் கடந்த 8 ஆம் திகதி மட்டக்களப்பு - வாகரைப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டதுடன், 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த சம்பவம் குறித்து விசாரிக்க வேண்டும் என அக்குழு கேட்டுள்ளது.

முன்னைய வன்முறைகள் குறித்து விசாரணை செய்ய அரசுத் தலைவர் விசாரணைக் குழுவை அறிவித்த பின்னர் மனித உரிமைகளை நசுக்கும் சம்பவங்கள் அதிக அளவில் நடந்துள்ளன என்பதையும் அக்குழுவின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

விசாரணையோடு அனைத்துக் குழுக்களாலும் மனித உரிமைகள் சிதைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தவும் மேலும் நிகழாமல் கண்காணிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும் அவசியம் என அது வலியுறுத்தியுள்ளது.

இவ்வேளையில் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் உரையின்போது, ஐ.நா. உறுப்பு நாட்டின் பிரதிநிதி ஒருவர், இலங்கையில் சீரழிந்து வரும் மனித உரிமைகள் குறித்துக் கவலை தெரிவித்ததோடு, ஸ்ரீலங்கா அரசினால் அறிவிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் செயல் பாடு குறித்தும், தண்டனை அளிக்கும் உரிமை குறித்தும் கேள்வி எழுப்பினார். (ஐ)

# செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.3

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளில் 2007ஆம் ஆண்டில் புதிய பாடத்திட்டத்தை கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கு இன்று செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

சங்கானை, சண்டிலிப்பாய் கோட்ட தரம் 6 ஆசிரியர்களுக்கான விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடச் செயலமர்வு மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் -

உடுவில் தெல்லிப்பழை கோட்ட தரம் 9 ஆசிரியர்களுக்கு புவியியல், வரலாறு, குடியுரிமைக்கல்வி ஆகிய பாடச் செயலமர்வுகள் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

(203-69)

# யாழ். வலயத்தின் சிறுவர் அரங்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் அரங்கம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார். (202)

# களுத்துறைச் சிறையில் இருந்து ஐந்து கைதிகள் தப்பியோட்டம்

கொழும்பு, டிசெ.3

களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்து ஐந்து கைதிகள் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் தப்பி ஓடியுள்ளனர்.

இவர்களை தேடிக் கண்டுபிடிக்கும்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

அங்கு தடுத்து வைக் கப்பட்டுள்ள விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் எவரும் தப்பி ஓடவில்லை என்றும்-

கொள்ளைகளுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களே தப்பி ஓடியுள்ளனர் என்றும்-

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ரவி விஜயவர்த்தன தெரிவித்தார்.


**கார் விற்பனைக்கு**

நல்ல பாவனையில் உள்ள 19-×××× இலக்கம் MARUTHI ZUZUKI-800 கார் விற்பனைக்கு உண்டு.
இல : 49, 5ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் (நக்கா வீதியில்) 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 18, நக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே.:222 6875


# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா தம்பித்துரை



(நொதேன் மோட்டோ வேக்ஸ் உரிமையாளர்)

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தம்பித்துரை 28.11.2006 அன்று காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும் அமரர் சபாரட்ணம், அமரர் நவரட்ணம், செல்வரட்ணம் ஆகியோரின் சகோதரரும் அமரர்களான கமலநாதன், சற்குணநாதன் மற்றும் வைகுந்தநாதன், தயாழினி, கோகிலநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மங்கையற்கரசி, குகனேஸ்வரி, ராதாமணி, சதாசிவம், வேல்விழி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எம்.எஸ்.ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (55710)

தகவல்:
த.கோகிலநாதன் (மகன்).

## திருமதி ஆறுமுகம் பரமேஸ்வரி

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் பரமேஸ்வரி 1.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா ஆறுமுகத்தின் மனைவியும், **Dr.** சுப்பிரமணியம் (லண்டன்), சண்முகலிங்கம் (கனடா), ஸ்ரீகாந்தா (சிற்றூர்தி உரிமையாளர்) குகதாஸ் (**C.T.B.**), மகாலெட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயும் மலர்விழி, விஜயலதா, புஸ்பலதா, கணநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் உலகேஸ்வரி (ஆசிரியை), நகுலேஸ்வரி **R.M.O**), சின்னத்தம்பி (கனடா), காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் ஓம்சக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (3.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி,
காரைநகர்.
T.P : 0242224640.

தகவல்: (55714)
ஸ்ரீகாந்தா (மகன்)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் பணியாளர்
**தூனியல் குயின்ரனி**
(கிளை முகாமையாளர்)

நேற்று முன்தினம் 01.12.2006 (வெள்ளிக்கிழமை) அகால மரணமானார். அவரது மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பணியாளர், பணிப்பாளர், அங்கத்தவர்கள். ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

## கண்ணீர்க் காணிக்கை



எமதுநிறுவனமுன்னாள் ஆசிரியரும், புதிய உயர் கல்லூரியின் அரசியல் பாட விரிவுரையாளருமான

**கியூபேட் ஆனந்தராஜன்**

அவர்களின் அகால மரணம் அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பொருளியற் கல்லூரி,
இயக்குநர், ஆசிரியர்கள் ஆளணியினர்.

## கண்ணீர் அஞ்சலி

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கும் **சி.சிவசேகரனின்** தந்தை

**சிதம்பரப்பிள்ளை கிருஷ்னானந்தன்**

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/54441) H.N.D.A.
முதலாம் வருட மாணவர்கள்

## 4ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

**அமரர் சின்னத்துரை இரத்தினம்(பத்தர்)**



தோற்றம் 09.03.1910 மறைவு 18.11.2002

*திதி: சதுர்த்தசி 03.12.2006*

மண்ணில் மறைந்து விட்ட போதிலும்
நெஞ்சில் எழுதி வைத்த உங்கள் நினைவுகள்
உயிரோடு வாழும் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

கலைமகள் வீதி,
கல்வியங்காடு. (55912)

இ.தங்கேஸ்வரன் (மகன்),
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



**சிதம்பரப்பிள்ளை கிருஷ்னானந்தன்**

*(முன்னாள் முகாமையாளர், இலங்கை வங்கி, நெல்லியடி)*

குரும்பகட்டி, புலோலியைச் சேர்ந்தவரும் இலங்கைவங்கியின் பருத்தித்துறை,சுன்னாகம், மானிப்பாய் கிளைகளில் பணியாற்றியவரும் எமது கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினருமாவார். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/54438)

யாழ். மாவட்ட இலங்கை வங்கி
ஊழியர், விளையாட்டு நலன்புரி
இலக்கிய அமைப்பு.

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கியில் 39 வருடங்கள் கடமையாற்றி, முகாமையாளராக கடந்த மாதம் ஓய்வுபெற்றவரும் எமது கிளையில் கடமை புரியும் **சிவவேல் அழகனின் (சிவம்)** தந்தையுமாகிய

**சிதம்பரப்பிள்ளை கிருஷ்னானந்தன்**


அவர்கள் 02.12.2006சனிக்கிழமை அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(55936)

முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கைவங்கி, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிதம்பர ஐயனார் நடராஜன் தேர்முட்டிகள்
## (காரைநகர் சிவன் கோயில்)
# சாந்திப் பெருவிழாவும் கலச அபிஷேகமும்


மெய் அடியார்களே!

நிகழும் வியவருடம் கார்த்திகை 17ஆம் நாள் இன்று (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் மூலமூர்த்திகளுக்கு அபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து புதிய தேர்முட்டிகளுக்கு சாந்திப் பெருவிழாவும் கலச அபிஷேகமும் நடைபெற தில்லைக்கூத்தன் திருவருள் கைகூடியுள்ளது.

அத்தருணம் அடியார்கள் அனைவரும் திருவருள் வேண்டி எம்பெருமான் திருவருளைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) இடம்பெறும்.

ஆ.அம்பலவிமுருகன்,
மு.சுந்தரலிங்கம்,
ஆதீனகர்த்தாக்கள்.

ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர்.

(55820)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




நிமல்ராஜ்-மைதிலி தம்பதியினரின்
செல்வப்புதல்வி **பாவனா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் விமரிசையாக கொண்டாடுகின்றார்.

பாவனாக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, ராசு தாத்தா குடும்பம், கமல் பெரியப்பா, மகிந்தன் மாமா, ஜேர்மனியில் வசிக்கும் சயந்தன் மாமா, பிரபாமாமா குடும்பம், செல்வன்மாமா குடும்பம், சுவிஸில் வசிக்கும் ரவிமாமா குடும்பம், யாழ்ப்பாணம் ராஜன்மாமா குடும்பம், லண்டனில் வசிக்கும் ஜெயந்தன்மாமா, மச்சான்மார் றொஷான், சிவா, அஸ்வின், மச்சாள்மார் மீனுஜா, கமலினி, அஸ்வினி, மற்றும் உறவினர்கள், நண்பர்கள் யாவரும் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

88, யாழ் வீதி
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்
குடும்பத்தினர்.

---

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்திக்கருகில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகங்கள், அரச அலுவலகங்கள், அரசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு - 021 - 222 6049

---

## A/L கணக்கீடு PERSONAL & GROUP Classes

பல வருடங்கள் கற்பித்தல், புள்ளி மதிப்பீட்டில் அனுபவமுடைய ஆசிரியரால் கற்பிக்கப்படும்.
தொடர்பு : கீன் நிர்வாகி
314/1, பலாலி வீதி,
ஆலடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
Tel.No : 021 4590395

(55613)

---

### மருத்துவ முகாம்

நவாலி, டிசெ.3

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஆனைக்கோட்டை முதியோர் சங்கத்தின் அனுசரணையுடன் ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையின் மருத்துவ முகாம் ஒன்றினைக் கடந்த வாரம் நடத்தியுள்ளது. இதில் இருநூறுக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றுச் சென்றனர். (203-100)

---

## வாழ்த்துகின்றோம்

இன்று 03.12.2006 இல்
மணிவிழாக் காணும்
மீசாலை மேற்கு
லயன் சீமாட்டி

### சற்குணநாதன் இரத்தினபூபதி



அவர்களை மேலும் பல்லாண்டுகள் மணியும் ஒலியும் போல இணைந்து விளங்கிட இவரின் 60 ஆவது பிறந்தநாளில் பல்லாண்டு கள் நீடுழி வாழ்க! வாழ்க! என்று கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் வாழ்த்துகின்றனர்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

லயன் சி.சற்குணநாதன்
Retd. T.A.

(55860)

---

## விரைவுப் பொதிகள் சேவை
## (PARCEL SERVICE)

சர்வதேச நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு: கொழும்பு/ யாழ்ப்பாணம்/ கொழும்பு விரைவுப் பொதிகள் சேவைகளும் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பில் இருந்து உங்களுக்குத் தேவையான உணவு, உடை, அலங்காரம், அன்பளிப்புப் பொருள்களை எம் மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

கொழும்பில் தொடர்புகளுக்கு:

**SAATHU TRAVELS**
344A, Galle Road, Wellawatte, Colombo - 06
0114943168, 0114943169, 0777535988

யாழ். தொடர்புகளுக்கு:

**RAINBOW TRAVELS & TOURS**
32 ½, கஸ்தூரியார் வீதி, -
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3237

(55532)

---

## புதிய கல்வியாண்டு 2007

தரம் 01 முதல் O/L வரை
ஆரம்பம் : 04.12.2006
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**மது கல்வி நிறுவனம்**
டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.

---

## நெஞ்சம் நிறைந்த மணிவிழா வாழ்த்துக்கள்



வலயக் கல்விப் பணிப்பாளராகவும் யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும் நிறை சேவை செய்து மணிவிழாக் காணும் திருவாட்டி

### செல்வராணி மகாலிங்கம்

அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, ஓய்வு காலம் செழிப்புற வாழ்த்துகின்றோம்.

கோட்டக் கல்வி அதிகாரியும்
[illegible]
[illegible]

---

## G.C.E. (O/L) தகைமையுடன்
## சிங்கப்பூர், மலேசியாவில் கல்வி

- ★ Hotel Management(வேலை வாய்ப்புடன்)
- ★ Com. Science, Com. Eng., Com. Gomes Design
- ★ Civil, Electrical, Mechanical Eng.
- ★ Air Craft Maintanance Technology
- ★ ACCA, CAT, Accounting கற்கைகள்
- ★ 3ஆம் ஆண்டுக் கல்வியை UK, Australiaவில் தொடர முடியும்
- → January 2007 புதிய பிரிவுகள் ஆரம்பம்
- → அனுமதி, தங்குமிட வசதி, பிரயாண ஒழுங்குகள், கற்கைநெறி பற்றிய விவரங்களுக்கு சனி, ஞாயிறு, போயா தினங்களில் காலை 9-12.30 வரை தொடர்புகொள்ளவும்.

**Golden Education Service**
**C/o Spider Games Spot**
561, கஸ்தூரியார் வீதி,
(இந்து ஆரம்பப் பாடசாலை அருகில்)
T.P: 222 5503

விரைவான பயண ஏற்பாடு

(55865)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## இவ்வழி போனால் எவ்விடம் சென்றடையும்?

ஆளும் தரப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கை அரசியலில் - குறிப்பாக தென்னிலங்கை அரசியலில் - புதிய திருப்பத்தை உண்டாக்கும் என்ற எதிர்பார்ப்பு பல தரப்புகளிலும் முகிழ்த்திருந்தது.

தென்னிலங்கை அரசியலில் கடந்த ஐம்பத்தைந்து வருடங்களுக்கு மேலாகப் பிரதான கட்சிகளாக, போட்டா போட்டியாக, கீரியும் பாம்பும் போன்று அரசியல் நடத்திவந்தவை இவை.

அதனால், அவற்றுக்கிடையே புரிந்துணர்வு ஏற்பட்டதை தென்னிலங்கை, பெரும் சாதனையாகவும் அரிய செயற்பாடாகவும் நோக்கியது. புரிந்துணர்வு நீடித்தால் நாட்டு வளர்ச்சிக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் பெருமளவில் உதவும் என்றும் நோக்கியது. அதில் குறைகொள்ள எதுவுமில்லை.

எனினும் -

ஸ்ரீல.சு.கட்சி - ஐ.தே.கட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து சாதகமாக பலதரப்புகளும் கருதியபோதிலும், அது நீண்டு நிலைத்து மக்களுக்கும் நாட்டுக்கும் உதவுமா என்பதில் சந்தேகமான, பாதகமான கருத்துக்களும் வெளிவந்திருந்தன.

இரண்டுவருடங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகக்கூடிய இந்தப் புரிந்துணர்வு ஏற்பாடு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தைத் தக்கவைக்கவும், ஐக்கியதேசியக் கட்சியின் அதிருப்திக் குழுவைச் சேர்ந்த சிலருக்குப் பதவிகள், சலுகைகள் கிடைக்கவுமே உதவிசெய்யும். ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்துவிடவும் கூடும் என்ற கருத்துக்களும் விமர்சனங்களும் எழாமல் இல்லை.

ஆனால் -

தமிழ் மக்களைப் பொறுத்தளவில், அவர்கள் தமது அரசியல் உரிமைகளை இழந்து நிற்பதற்கும், சுதந்திரமான பிரஜைகள் என்ற நிலையிலிருந்து வீழ்த்தப்பட்டமைக்கும் இந்த இரண்டு கட்சிகளுமே பொறுப்பு. அது விடயத்தில் ஏட்டிக்குப் போட்டியாக வீறுகொண்டு செயற்பட்டவை.

எனவே, இவையிரண்டுக்கும் இடையில் புரிந்துணர்வு உண்டாகியதால், அது தமிழர் பிரச்சினைக்கு உகந்த தீர்வைக் கொண்டுவரும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் இல்லை.

சுருக்கமாகக் கூறுவதானால், இரண்டு கட்சிகளுமே மோதகமும் கொழுக்கட்டையும் போன்றன. வெளித் தோற்றங்களில் மட்டுமே வித்தியாசமானவை; உள்ளடக்கம் ஒன்றுதான்!

அதனால், தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் பிரிந்துநின்று செயற்பட்டாலும், புரிந்துணர்வுடன் ஒன்றுசேர்ந்து இயங்கினாலும், தமிழர்களுக்கு எவ்விதமான நன்மையையோ அல்லது ஆக்கபூர்வமான விளைவையோ, திருப்புமுனையான செயற்பாடுகளையோ எதிர்பார்ப்பதற்கில்லை.

இத்தகைய ஒரு பின்புலத்தில் -

இரண்டு பெரிய அரசியல் கட்சிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான லக்ஷ்மன் கிரியெல்ல (நாடாளுமன்ற உறுப்பினர்) அபாய அறிவிப்பு ஒன்றை விடுத்திருக்கிறார்! கட்சியின் உத்தியோகபூர்வ செய்தியாளர் மாநாட்டில் இந்த அபாய அறிவிப்பு வந்திருக்கிறது.

தமது அறிவிப்புக்கு அவர் காட்டிய முதன்மைக் காரணங்களில் ஒன்று, சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆளுங்கட்சி, ஐ.தே.கட்சியுடன் இணங்காமையே என்பதாகும்.

* ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தமா? சமாதானமா? என்பதிலும், நாட்டை எவ்வாறு வழிநடத்திச் செல்வது என்பதிலும் தெளிவான தீர்மானம் ஒன்றை எடுக்கத் தவறிவிட்டார். சமாதானத்துக்கு அழைப்பு விடும் அதேவேளை, யுத்தத்தையும் மேற்கொள்கிறார்.

* ஏ-9 பாதை மூடப்பட்டது. அதனால், குடாநாட்டு மக்கள் உணவின்றி அவலப்படுகின்றனர்.

* எமது ஆட்சிகாலத்தில் நாம் சமாதானத்தைத் தெரிந்தெடுத்தோம். அந்தப் பாதையில் நாம் நீண்ட தூரம் சென்ற நிலையில் சந்திரிகா அரசு நாட்டை மீண்டும் யுத்தத்திற்குள் தள்ளியது. மஹிந்த அரசும் அந்த வழியிலேயே நகர்கின்றது. அதனால் நாட்டில் பயங்கரவாதம் அதிகரித்துவிட்டது. பொருளாதாரம் வீழ்ச்சி காண்கிறது.

* இப்போது யுத்தநிலையை மஹிந்த அரசு தொடர்வதால், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனிநாடு கோருகின்றார். அப்படியே கருணா குழுவினரும் கோருகின்றனர்.

ஐ.தே.கட்சியைச் சேர்ந்த பிரமுகர் தொட்டுக்காட்டிய மேற்கண்ட நிலைப்பாட்டில் இருந்து ஓர் உண்மை வெளிப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்தர், சர்வதேச சமூகத்திற்கு சமாதான முகமூடியை அணிந்து காட்டிக் கொண்டு, போரை நடத்துவதற்கான முழுமுயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

சமாதானத்தை எட்டுவதற்கான முயற்சியில் உளப்பூர்வமாக ஈடுபடாமல், போருக்கான ஆயத்தங்களையே முடுக்கி வருகிறார் என்ற தகவல்கள் அனைத்தும் உண்மை என்பதனை லக்ஷ்மன் கிரியெல்லவின் தகவல்கள் ஊர்ஜிதம் செய்கின்றன.

அதிகாரத்தைப் பரவலாக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக ஒரு பக்கத்தில் கூறிக்கொண்டு, உள்ளூர போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டு யுத்தத்தைத் தீவிரமாக முன்னெடுக்க முனைகிறது அரசு.

நாட்டுக்குப் பாதகமான இத்தகைய விரும்பத்தகாத உள்நோக்கத்தைக் கொண்டிருப்பதனாலேயே, போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் அரசாங்கப் படைகள் செயற்பட்டு வருகின்றன. ஆளுந் தலைவரின் உடன்பாடும், ஆதரவும், ஆசீர்வாதமும் இல்லாமல் அவை அவ்வாறு நடந்துகொள்ள மாட்டா என்பது மிகவும் தெளிவு.

ஆனால், ஆயுதப்படைகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறவில்லை என்றும் விடுதலைப் புலிகளே அதனைச் செய்வதாகவும், தூண்டுவதாகவும் தமது அமைச்சரவைச் சகாக்களைக் கொண்டும், இராணுவ அதிகாரிகளைக் கொண்டும் நம்பத்தகுந்த விதத்தில் பிரசாரம் செய்கிறார் ஜனாதிபதி.

ஸ்ரீல.சு.க. - ஐ.தே.க. புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிகிறதோ, தொடர்கிறதோ, நாட்டை யுத்தத்தில் மூழ்கச் செய்வதற்கான செயற்பாடுகளே முனைப்புப் பெறுகின்றன என்பது மட்டும் துலக்கமாகத் தெரிகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக அரச தரப்பில் கூறப்பட்டிருப்பது அதற்கான முத்தாய்ப்பே!

இவ்வழி போனால் எவ்விடம் சென்றடையும்?

## நகரில் புதிய பாதுகாப்பு நடைமுறை; போக்குவரத்தில் நெருக்கடி நிலை

குருநகர், டிசெ.03

யாழ். நகரில் படையினர் தற்போது புதிய பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொண்டுள்ளதன் காரணமாகப் போக்குவரத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.நகர் கிழக்குப் பகுதியில் வாழும் மக்கள் மற்றும் அரச, தனியார் ஊழியர்கள் நகருக்குச் செல்வதற்கு யாழ்.பிரதான வீதி மற்றும் காங்கேசன்துறை வீதி ஆகியவற்றையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

நகரில் இருந்து ஆஸ்பத்திரி வீதி, முதலாம் குறுக்கு வீதியூடாக மட்டுமே வெளிச்செல்ல முடியும்.

ஒரே தடவையில் பல வாகனங்கள் குறிப்பிட்ட வீதிகள் ஊடாகச் செல்லும் போது போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் நிலைமையும் தோன்றியுள்ளது.

புதிய நடைமுறை காரணமாகப் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட அனைவரும் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

நகரில் அரச அலுவலகங்கள், தனியார் வர்த்தக நிலையங்கள், வைத்தியசாலை, பாடசாலைகள் என்பன இயங்கி வருகின்றன.

இங்கு படையினர் முகாம்களும் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இராணுவத்தினரும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் நகரப் பகுதியில் போக்குவரத்துச் செய்வதில் கஷ்ட நிலைமை தோன்றியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (203-51)

## சாவகச்சேரியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

தென்மராட்சி, டிசெ.3

சாவகச்சேரி ஹென்ஸ்மன் ஒழுங்கையில் வைத்து நேற்றுக்காலை 9.30 மணியளவில் கராஜ் உரிமையாளர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நுணாவில் கிழக்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான மயில்வாகனம் தவராசா (வயது 29) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் கராஜில் இருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் இவரை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(1-203)

## வல்வெட்டியில் குண்டுவீச்சு; சிப்பாய் பலி, மற்றொருவர் காயம்

உடுப்பிட்டி, டிசெ.3

உடுப்பிட்டி - வல்வெட்டித்துறை பிரதான வீதியில் வல்வெட்டி என்னும் இடத்தில் நேற்று அதிகாலை 5 மணியளவில் ரோந்து சென்ற படையினரை இலக்குவைத்து கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானார் என்றும் மற்றொரு சிப்பாய் காயமடைந்தார் என்றும் பாதுகாப்பு ஊடகத்தகவல் மையம் தெரிவித்தது.

(1-155)

## கொள்ளுப்பிட்டி தாக்குதல் குறித்து இதுவரை 25 பேர்களிடம் விசாரணை

கொழும்பு, டிசெ.03

கொள்ளுப்பிட்டியில் நேற்று முந்தினம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து இதுவரை 25 பேர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் லூகொட இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மூன்று விசேட குழுக்கள் தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன என்றும்-

இந்தச் சம்பவத்தில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் எவரும் இதுவரை இனங்காணப்படவும் இல்லை; கைது செய்யப்படவும் இல்லை என்றும்- அவர் மேலும் தெரிவித்தார். (1)

## நலன்புரி நிலையங்களிலுள்ள சிறார்களுக்கு சத்துணவு மா வழங்கப்பட்டு வருகின்றது

யாழ்ப்பாணம், டிசெ.03

குடாநாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள சிறார்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் சத்துணவு மா வழங்கப்பட்டு வருகின்றது.

முகாம்களில் தங்கியுள்ள பன்னிரண்டு வயதிற்குட்பட்ட 300 சிறுவர்களுக்கு வாராந்தம் ஒரு கிலோ நிறையுடைய சத்துணவு மா பைக்கற்றுகள் வழங்கப்படுகின்றன.

வடமராட்சியில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி விநாயகர் வித்தியாலயம், மணியகாரன் தோட்டம், சுடரொளி சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும்-

தென்மராட்சியில் மந்துவில் அரசினர் வித்தியாலயம், மந்துவில் வடக்கு சனசமூக நிலையம், மந்துவில் நவசக்தி சனசமூக நிலையம், மந்துவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய இடங்களில் தங்கியுள்ள சிறார்களுக்கே சத்துணவு மா வழங்கப்படுகின்றது.

இந்தச் சத்துணவு மா வழங்கல் தென்மராட்சியில் வெள்ளிக்கிழமையும், வடமராட்சியில் புதன்கிழமையும் தொடர்ச்சியாக இடம்பெறுமென நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

(203)

## வெள்ளவத்தையில் எட்டுத்தமிழர் கைது

கொழும்பு,டிசெ.3

வெள்ளவத்தையில் நேற்றுமுன்தினம் மாலை படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது எட்டுத் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆள் அடையாளத்தை நிரூபிக்கத்தவறியமைக்காக இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனப் படையினர் தெரிவித்தனர். (1)

## மாவிலாறில் சிப்பாய் காயம்

கொழும்பு, டிசெ.03

திருகோணமலை மாவட்டத்தில் மாவிலாற்றுப் பகுதியில் நேற்று முந்தினம் மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என தேசிய பாதுபாப்பு ஊடகத் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

## எயிட்ஸ் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.03

யாழ்ப்பாணம் சுகவாழ்வுப் பயணம் நிறுவனத்தால் உலக எயிட்ஸ் தினத்தை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு முன் அமைந்துள்ள அதன் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஞானசோதியும் சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் ஆர்.சிவசங்கரும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-79)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ.03

செயல்திறன் அரங்க இயக்கம் கைதடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இன்று காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 2.30 மணிவரை சிறுவர் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

இடர்களின் மத்தியில் வாழும் சிறுவர்களின் மனங்களை இடர்களில் இருந்து மீட்கும் பணியில் செயல்திறன் அரங்க இயக்கம் ஈடுபட்டு வருகின்றது.

அதன் ஒரு செயற்பாடாகவே இக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (75-203)

## நாளை

கார்த்திகை 18
திங்கட்கிழமை
04.12.2006
திதி : சதுர்த்தசி
காலை : 08.02
நட்சத்திரம் : கார்த்திகை
பிற்பகல் : 03.37
சுபநேரம் : 12.15 - 01.45
ராகுகாலம் : 07.45 - 09.15

தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்களில்

## மாலை நேரம் ஏற்படும் மின்தடையால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் சிரமம்

யாழ்ப்பாணம், டிசெ.03

தென்மராட்சி,வடமராட்சிப் பிரதேசங்களில் மாலை வேளைகளில் தினமும் மின்சாரம் நிறுத்தப்படுவதால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பிரதேசங்களில் ஒரு நாளைக்கு மாலை 6 மணி தொடக்கம் 7.30 மணி வரையும், மறுநாள் 7.30 மணி தொடக்கம் 8.15 மணி வரையும் மின் விநியோகம் நிறுத்தப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடு சுழற்றி முறையில் தென்மராட்சி, வடமராட்சி பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்றது.

மூன்றாம் தவணைப் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு ஆகியவற்றுக்குத் தோற்றும் மாணவர்கள் மின்சாரத் தடையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மண்ணெண்ணைக்குத் தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில் மாணவர்களின் கல்வி நிலையில் அக்கறை கொண்டு பரீட்சைகள் முடியும் வரை மாலை 6 மணி தொடக்கம் இரவு 11 மணி வரை மின் விநியோகம் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பெற்றோர் தெரிவித்துள்ளனர். (203)

## 'சிக்குன் குனியா' நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்க மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்

யாழ்ப்பாணம், டிசெ.03

குடாநாட்டில் வேகமாகப் பரவி வரும் 'சிக்குன் குனியா' வைரஸ் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகளை முழுமையாகக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவை என நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் பரவிவரும் வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் துப்பரவு செய்தல், மருந்து தெளித்தல்போன்ற செயற்பாடுகள் மூலம் நுளம்புகளை அழிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக நோய் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் தீவிர தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொது மக்கள் கண்ட இடங்களிலும், வீதி ஓரங்களிலும் குப்பைகள், கழிவுப் பொருள்களைக் கொட்டாது வீடுகளில் தேக்கி வைத்திருந்து தமக்கு அறிவிக்கும் பட்சத்தில் சுத்திகரிப்புத் தொண்டர்கள் மூலம் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருந்து நுளம்புகள் பெருகும் இடங்களை இல்லாதொழிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (203-79)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரையில் இருந்து அவசர நோயாளரை மட்டு. நகருக்கு அழைத்துவர அனுமதியில்லை

கொழும்பு, டிசெ.3

மட்டக்களப்பு மாவட்டம் வாகரையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து நான்கு அவசர நோயாளர்களை மட்டக்களப்பு வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்வதற்கு செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினரின் உதவி நாடப்பட்டுள்ளது.

இவர்களில் கர்ப்பிணிப்பெண் ஒருவரும், இராணுவத்தினரின்துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த ஒருவரும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் உதவியுடன் வழமை போன்று மாங்கேணி பாதையூடாக இந்த நோயாளரைக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் குறித்து அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகளுக்கான அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுடன் தொடர்புகளை ஏற்படுத்தியபோதும் - தொடர்புகள் கிடைக்கவில்லை என திருகோணமலை மாவட்ட தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம் தெரிவித்தார்.

ஆயினும் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினர் இவ்விடயம் தொடர்பாக இராணுவத் தரப்பினருடன் தொடர்பு கொண்ட போதும் அவர்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்நோயாளர்களை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மூடப்பட்ட திருகோணமலை மஹிந்தபுர பாதையூடாக கொண்டு செல்ல செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் விடுதலைப் புலிகளைக் கோரிய போதும் ஒரு நாள் மட்டும் இப்பாதை திறப்பது சாத்தியமானது அல்ல எனவும் -

முழுமையாகத் திறப்பது என்றால் இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் -

விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (12)

# நாடாளுமன்றத் தேர்தலை ஏப்ரலில் நடத்த ஐ.தே.க. சவால்

கொழும்பு, டிசெ.03

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியை ஒருங்கிணைப்புச் செய்த பின்னர் எந்த வேளையிலும் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கத் தயாராக உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (12)

# வன்முறைகளைக் கைவிடுமாறு இருதரப்பையும் கண்காணிப்புக் குழுவினர் கோருகின்றனர்

கொழும்பு,டிசெ.3

வன்முறைகளை கைவிட்டு போர் நிறுத்த உடன்படிக்கையை மதித்து செயற்படுமாறு அரசையும் விடுதலைப்புலிகளையும் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழு கேட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை விடுதலைப்புலிகள் தான் நடத்தினர் என்பதை உறுதிசெய்யக்கூடிய சான்றுகள் இருப்பதாகக் கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (12)

## அருட் கவியின் சிலை வெள்ளியன்று திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.3

அருட்கவி கலாநிதி சீ.விநாசித்தம்பிப் புலவரின் திருவுருவச்சிலை ஸ்ரீ நாக வரத நாராயணர் ஆலய முன்றிலில் நேற்றுமுன்தினம் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

அதிபர் ம.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் சிலையை திரைநீக்கம் செய்து வைத்து உரையாற்றினார்.

தொடர்ந்து செஞ்சொற்சொல்வர் ஆறு திருமுருகன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி ம.சண்முகதாஸ், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் இராஜகோபால் ஆகியோர் உரை நிகழ்த்தினார்.

இதனையடுத்து 'விநாசித்தம்பி ஐயாவின் பக்திப்பாடல்கள்' எனும் நூலைப் பதில் துணைவேந்தர் இ.குமாரவடிவேல் வெளியிட்டு வைத்தார்.

விநாசித்தம்பி ஐயாவின் சிலையை வடித்த சிற்பக் கலைஞர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (1-203)

# அதிகாரப்பகிர்வு குறித்த யோசனைகள் ஜனவரி இறுதியில் பூர்த்தியாக்கப்படும்

கொழும்பு,டிசெ.3

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரத்தைப் பரவலாக்கும் அரசின் யோசனைகளை எதிர்வரும் ஜனவரிமாத இறுதிக்குள் தயாரித்து பூர்த்தி செய்வதற்கு அரசு எண்ணியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளன.

அதிகாரப் பகிர்வு குறித்த யோசனைகளை உருவாக்க நியமிக்கப்பட்ட சர்வ கட்சி நிபுணர்கள் குழுவுக்கு இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் யோசனை ஒன்றும் இரண்டு வாரகாலத்தில் முன்வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த யோசனைகளையும் கருத்தில்கொண்டு அதிகாரப்பகிர்வு குறித்த இறுதியோசனைகள் குறித்து பேச்சு நடத்தப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (12)

## பௌர்ணமி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.3

அகில இலங்கை திருமறைமன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறைப் பாராயணம் என்பன நாளை திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் கந்தர்மடம் சிவகுரு நாதபீட வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.

நாயன்மார் நால்வருக்கு அபிஷேக ஆராதனை, பன்னிருதிருமுறை நூல்களுக்கு விசேட பூசை, அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறைப் பாராயணம், திருவாசக முற்றோதல் என்பன நடைபெறவுள்ளன. (79-203)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ்ப்பாணம், திருநெல்வேலி சேர். பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தால் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு போயாதின ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பஜனைகள், பிரார்த்தனைகள் என்பன இடம்பெற்று மதியம் நாராயண சேவையுடன் நிகழ்வு நிறைவுறும். (1-79)

# பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மாநகரசபைக்கு 3லட்சத்து 55ஆயிரம்!

நல்லூர், டிசெ.3

படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் இறுதியாக, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து யாழ். மாநகரசபைக்கு ஒதுக்கிய நிதி கிடைத்துள்ளது என்று யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார்.

மாநகர சபையின் இசைக்குழுவிற்குத் தேவையான வாத்தியக் கருவிகளைக் கொள்வனவு செய்யும் பொருட்டு இந்த நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஒதுக்கீடு செய்திருந்தார்.

இது தவிர நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாநகர சபையின் சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்களின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்திருந்தனர்.

கொய்யாத்தோட்டப் பாலர் பாடசாலைக்கு கட்டட புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபா, கொழும்புத்துறை சனசமூக நிலைய கட்டட வேலைகளுக்கு ஒரு லட்சம் ரூபா, கொட்டடி ஸ்ரார் சனசமூக நிலைய கட்டடப்புனரமைப்புக்கு 50ஆயிரம் ரூபா, நாவாந்துறை கென்னடி சனசமூக நிலையத் தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபா, யாழ்.மாநகராட்சி மன்ற இசைக்குழுவுக்கு 75ஆயிரம் ரூபா, கொட்டடி சனசமூக நிலையத் தளபாடக் கொள்வனவுக்கு 30ஆயிரம் ரூபாவுமாக 3 லட்சத்து 55ஆயிரம் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வேலைத்திட்டங்களை உடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளரை யாழ்.மாநகர சபை ஆணையாளர் கேட்டுள்ளார். (203-111)

## தென்மராட்சிப் பகுதியில் ஆயிரம் மரக்கன்று நடத்திட்டம்

தென்மராட்சி, டிசெ.3

சுற்றாடல் பாதுகாப்புத் திட்டத்தினையொட்டி ஆயிரம் மரக்கன்றுகளை நடும் செயற்பாட்டினை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலைகள், ஆலயங்கள், பொது அமைப்புகளின் கட்டடங்கள் ஆகியவற்றில் மரக்கன்று நடப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர்கல்லூரி, மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் ஆலய திருப்புகழ் மண்டபம் ஆகியவற்றில் மரக்கன்றுகள் நடப்பட்டதாகவும் அடுத்து வரும் நாள்களில் பொது அமைப்புகள் உள்ள கட்டடச் சுற்றாடல், ஆலயங்களின் சுற்றாடல் உட்பட பல இடங்களில் மரக்கன்று நடப்படவுள்ளதாக கழகத் தலைவர் லயன்.வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

## செஞ்.தொண்டர்களுக்கு பயிற்சி நெறி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சிக் கிளையின் அங்கத்தவர்கள், தொண்டர்கள் ஆகியோருக்கான மூன்று நாள் பயிற்சிநெறி எதிர்வரும் ஒன்பதாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பயிற்சிநெறிகள் மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் ஆலய திருப்புகழ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.மாவட்டக் கிளை யின் அனுசரணையுடன் இப்பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளது.

பயிற்சிநெறிகளில் பங்குபற்ற விரும்புவோர் சங்க அங்கத்தவர்கள், தொண்டர்கள் சங்க அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு சங்கத்தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் கேட்டுள்ளார்.

## அறநெறி ஆசிரியர்களுக்கு உபகரணக் கொள்வனவுக்கு உதவி

யாழ்ப்பாணம், டிசெ.03

அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும்ஆசிரியர்களுக்கு பாடப்புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள் கொள்வனவுக்கென 2ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாண்டு முற்பகுதியில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் ஆசிரியர் விவரங்களை அனுப்பி வைத்தவர்களுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதுவரை விண்ணப்பங்களை அனுப்பி வைக்காதவர்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் கேட்டுள்ளார். (203)

## விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச நாடுகள் தடைசெய்து வருகின்றன. இதன் தொடர்பில் இலங்கையிலும் அந்த அமைப்பை தடைசெய்வது குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.

அந்த அமைப்பைத் தடை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன எனினும் இதுவரைஅது தொடர்பாக தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை - என்றார் அவர். (1)

## மட்டுப்படுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது என்றும் - போக்குவரத்துச்சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி பாடசாலை பஸ் சேவைகளையும், இரவு தரிப்புச் சேவைகளையும் நடத்த முடிவாகி உள்ளது. ஏனைய சேவைகள் பாதுகாப்பான சூழ்நிலை ஏற்பட்ட பின்பே பண்ணையில் இருந்து நடத்தப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று நடந்த சிவில் பிரஜைகள் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் எமது நிலைப்பாட்டை விளக்கினோம். - கொழும்பு சென்றுள்ள அரச அதிபர் திரும்பியதும், எமது பிரச்சினைகளை அவருக்கு விளக்கி, பஸ் நிலையத்தை பயன் படுத்த ஏற்பாடு செய்யுமாறு கோரவிருக்கின்றோம் - என்று போக்குவரத்துச் சபை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-1-79-111)

## புலிகளைத் தடைசெய்வது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளியன்று கொள்ளுப்பிட்டியில் வைத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதும், மயிரிழையில் அவர் உயிர் தப்பியதும் தெரிந்தவையே. அதனையடுத்து நேற்றுமுன்தினம் மாலையில் அமைச்சரவையினர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர்.

அதன் பின்னர் அமைச்சரவைக் கூட்டம் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றதாகவும், அப்போதே விடுதலைப் புலிகளைத் தடைசெய்யவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டதாகவும் இணையத் தளச் செய்தி தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் சகல வன்முறைகளையும் நிறுத்தவேண்டும் என்று உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் அந்த அமைப்பைத் தடைசெய்யுமாறு கோரும் யோசனை அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுப் பரிசீலனை செய்யப்பட்டதாகவும் அதே செய்தியில் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சமாதானச் செயலகத்தின் பிரதித் தலைவர் கேதீஸ் லோகநாதன் ஆகியோரின் கொலை மற்றும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா மீதான கொலை முயற்சி குறித்தும் -

ஆகப்பிந்தி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மீதான கொலை முயற்சி குறித்து அரசாங்கம் ஆழ்ந்த கவலையும் விசனமும் அடைந்துள்ளதாகவும் அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

கெப்பிற்றிக்கொல்லாவவில் இடம்பெற்ற படுகொலைகள், ஹபரணையில் நிராயுதபாணிகளான கடற்படையினரின் படுகொலைகள், மாவிலாறுச் சம்பவம் என்பன குறித்தும் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டதாகவும் இணையத்தளச் செய்தியில் விவரிக்கப்பட்டுள்ளது. (அ)


நாவலர் இன்ரிரியூட்

| (1) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். | (2) பலாலி வீதி, திருநெல்வேலி. |
|---|---|

புதிய கல்வியாண்டு 2007
தரம் 1 முதல் O/L வரை
புதிய வகுப்புகள் யாவும் இரு இடங்களிலும்
ஆரம்பம் 09.12.2006
சனி 8.30 மணி.
அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளவும்.

BRAIN POWER INSTITUTE
(சின்னக்கடை சந்தைக்கருகில்)
A/L DAY CLASS
ACC :- பாலகஜன்
Mon - Fri, 7.30-9.30 am
ECO :- கஜீதரன்
Mon - Fri, 6.30-7.30 am
B.St :- சசி
Mon - Fri, 1 - 3 pm
Sat - Sun, 3 - 4 pm
உயர் கல்விக்குச் செல்ல இன்றே இணையுங்கள்.
★ அதிவிசேட சித்திக்கு உத்தரவாதம்.
★ தனிப்பாட அனுமதி வழங்கப்படும்

பொருளியல்
A/L 2008 1வி, ஞாயிறு
நெகிழ்ச்சிக்கோட்பாடு
A/L 2007 1வி, ஞாயிறு
வங்கி
DAY திங்., புத., வெள்.
சந்தைப்பொருளாதாரம்
அனுமதிகள் அலுவலகத்தில்
யூனிவேர்சல்
யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்

LOGIC
விசேட கருத்தரங்கு
பகுதி I
திங்கள் 8a.m.- 11a.m.
BY:P. கமல்
வெளி மாணவரும் கலந்து கொள்ளலாம்
யூனிவேர்சல்
யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்

ABE (U.K)
Dec 2006 Exam
Exam Centre :-
35,Murugesar Lane,
MuthiraiSanthi,
Nallur.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org